**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி**(Higher Certificate Course)
**HG20 – நிலை II (Grade II)**

**நேரடி எழுத்துத் தேர்வு**(Written Examination)
**ஜனவரி–பிப்ரவரி 2023**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**

***Answer all questions in a word / line.*** **(10x1 = 10)**

1. இறைவன் எந்த வடிவில் இருக்கின்றான்?
2. கா. நமச்சிவாயம் நடத்திய இதழின் பெயர்?
3. இராமனுடைய சிற்றன்னையின் பெயர்?
4. தமிழில் தோன்றிய முதல் பரணி நூல்?
5. வல்லிக்கண்ணன் பெற்ற விருது எது?
6. 'இளமை விருந்து' என்ற நூலை இயற்றியவர் யார்?
7. சித்தன்னவாசலில் உள்ள சுனையின் பெயர் யாது?
8. ஒரு சொல் தனித்து வருவது ?
9. கிழக்கு + வானம் என்பது?
10. இலக்கணத்தில் பிழையைக் குறிக்கும் சொல்?

**பகுதி –ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. தமிழ் நாடு அரசு கண்ணதாசனை எவ்வாறு சிறப்பித்தது?
2. தமிழ்மொழி விளங்கும் தாயகம் யாது?
3. தொட்டிக்கலை என்பது எவ்வாறு மருவியது?
4. அன்னை அபிராமி எந்த வகை கடவுள்?
5. எது மனித வாழ்க்கை ஆகும்?
6. இறை உணர்வு எதைத் தரும்?
7. பெரியார் எத்தனை வகையானப் பதவிகளை ஒரே நேரத்தில் வகித்தார்?
8. குகைக்கோவில் மண்டபத்தில் இடது புறத்தில் உள்ள ஓவியம் யாது?
9. முத்தமிழ் விளக்கம் தருக?
10. மலர் சூடினாள் – இது எவ்வகை மொழி?
11. பால் பசுவின் வால் என்ன நிறம்?

12. அரசவையில் மன்னன் எழுப்பிய கேள்வி யாது?
13. ஜார்ஜ் ஸ்டீபன்சன் எங்கு வேலை பார்த்தார்?
14. ஆசிரியப்பாவிற்கு உரிய ஓசை யாது?
15. இனமொழி விடை என்றால் என்ன?

**பகுதி – இ**

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**
***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. இராமலிங்க அடிகள் வடலூர் வள்ளலார் என அழைக்கப் பெறக் காரணம் என்ன?
2. இராமனுக்கு உணவாகக் குகன் கொண்டு வந்தவை எவை?
3. திருமால் யாராகப் பிறந்தான் என்று புலவர் கூறியுள்ளார்?
4. நாட்குறிப்பில் எத்தகையச் செய்திகளை எழுதலாம்?
5. சான்றோருடன் ஒப்பிட்டுக் கூறப்பெறுவது யாது?
6. தொடர் வண்டியில் கிடைக்கும் வசதிகள் யாவை?
7. தொழில்பெயரின் இரு நிலைகளைக் கூறுக.
8. உடம்படுமெய்யாக வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

**பகுதி –ஈ**

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்விடை தருக**
***Answer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. உம் பாடப்பகுதியில் நாட்டுப்புறப்பாடலுள் ஒன்றான தாலாட்டுப் பாடல் குறித்து எழுதுக.
2. குறுக்கங்களின் வகைகள் குறித்து எழுதுக?
3. இயேசு பகைவரையும் நேசிக்கும் தன்மை உடையவர் என்பது குறித்து உம் பாட நூல் வழி விளக்குக.

**பகுதி –உ**

**V.ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக்கட்டுரை வடிவில் விடை தருக**
***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. பகுத்தறிவுப் பகலவன் குறித்த கருத்துகளை எழுதுக
2. விடை வகைகள் குறித்து எழுதுக.

*****